DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 338/2022

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.முனியசாமி | Caste: | |
| Father's Name | : கோடாங்கி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

20.06.2025 – 03.15 PM

1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் அவதாண்டை கிராமத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை எங்கள் ஊர் தெற்கு பக்கம் உள்ள சத்தார்பாய் என்பவரது வயலில் கூலிக்காக தண்ணீர் பாய்ச்ச சென்றிருந்தேன். காலை 08.30 மணியளவில் நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஆறுமுகம் மகன் முனியசாமி என்பவர் என்னை பார்த்து ஏன்டா எனது வயலுக்கு வரும் தண்ணீரை வெட்டிவிட்டாய் என்று கேட்டு உன்னை வெட்டிக் கொன்றுவிடுவேன் என்று சொல்லி மண்வெட்டியால் எனது வலது பக்க கண்புருவம் அருகில் வெட்டினார்.

2. திரும்பவும் வெட்ட வந்தபோது வலது கையால் தடுத்தபோது வெட்டானது எனது வலது கையின் மணிக்கட்டுக்கு கீழ் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. பின்னர் நான் சிறிது தூரம் சென்றபோது முனியசாமியின் மகன் கருப்பசாமி என்பவர் வந்து எப்படிடா என் அப்பனிடம் சண்டைக்கு வரப் போச்சு என்று சொல்லி எனது இடது காலில் ஓங்கி மிதித்து வயலுக்கு சென்று கொண்டிருந்த தண்ணீரில் தள்ளிவிட்டார்.

3. வயலில் இருந்த சத்தார்பாய் சம்பவத்தை பார்த்து 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னார். ½ மணி நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்ததும் சம்பவத்தை பார்த்து

வந்த எனது தம்பி மகன் குமார் என்பவர் ஆம்புலன்ஸில் என்னை ஏற்றிக் கொண்டு கடலாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அன்று மதியம் பெருநாழி போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த சம்பவத்தை சொன்னேன். போலீசார் எழுதிக் கொண்டு என்னிடம் கைரேகை பெற்றார்கள்.

4. எனக்கு வலது கையில் வெட்டுக்காயம் பட்டதால் இடது கை பெருவிரல் மூலம் கைரேகை வைத்தேன். பின்னர் அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் அன்றே ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு 3 மாத காலம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன்.

5. மருத்துவர்கள் எனக்கு வலது கையில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தினார்கள். அதன் பின்னர் என்னால் முன்பு போல் எந்த வேலையும் செய்ய இயலவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையது. என்னிடம் போலீசார் படித்துக் காண்பித்தார்கள். நான் சொன்னபடி எழுதியிருந்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மண்வெட்டியால் தான் 1ம் எதிரி என்னை தாக்கினார். மண்வெட்டி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1. நான் போலீசாரிடம் கூறியதை அவர்கள் எழுதிக் கொண்டதாக கூறியுள்ள நிலையில் அந்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. அதனால் நான் படித்து பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது நான் மயக்க நிலையில் இருந்தேனா என்றால் ஆமாம். இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்றவுடன்தான் தெளிவடைந்தேன். நான் மட்டும் தான் வயலில் வேலை செய்தேன். நான் வேலை பார்த்த இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளனவா என்றால் வீடுகள் சற்று தூரத்தில் உள்ளது.

2. சம்பவமானது காலை 08.30 மணியளவில் நடந்தது. மருத்துவமனைக்கு இரவு 07.00 மணியளவில் சென்றேன். சத்தார்பாயும், குமாரும் காலை 08.30 மணியளவிலேயே வந்து என்னை தூக்கிவிட்டார்கள். சத்தம் கேட்டு குமார் ஓடி வந்தார். வயல் வரப்பில் தண்ணீர் பாய்ச்சுவது வேண்டாத களைகளை அறுப்பது போன்ற வேலைகளை செய்வேன். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்னதாக வேறு வழக்குகள் இருந்தனவா என்றால் இல்லை. வாய்த்தகராறு மட்டும் இருந்தது. ஆனால் நான் அளித்த புகாரில் எதிரிகளுக்கும் எனக்கும் இடையே வழக்கு இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அப்படி கூறவில்லை.

3. 1ம் எதிரி என்னை தாக்கிய 20 நிமிடங்கள் கழித்து 2ம் எதிரி வந்து என்னை மிதித்து தள்ளினார். அவர் என்னை மிதித்தபோது சத்தார்பாயும், குமாரும் இருந்தார்களா என்றால் ஆமாம், இருந்தார்கள். நான் வயல் வரப்பில் நிலை தடுமாறி கீழே விழுந்து அதன் காரணமாக எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளின் செயலால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும், எதிரிகளின் மீதான முன் விரோதத்தில் நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. மண்வெட்டியை 1ம் எதிரி முனியசாமி வைத்திருந்தார். அ.சா.பொ.1 ஆனது முனியசாமியிடம் இல்லை என்றாலும் அ.சா.பொ.1 யை சம்பவத்தன்று நான் வைத்திருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் ஒரு பேப்பரில் தான் கைரேகை வைத்தேன். புகாருக்கு பின்னதாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. அவ்வப்போது வந்து பார்த்து புகைப்படம் மட்டும் எடுத்துச் சென்றார்கள். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.